3. விதி 110-ன்கீழ் அறிக்கை—*தொடர்ச்சி*

1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிரிழந்த சமூகநீதிப் போராளிகளுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்தல் குறித்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும், மற்றவர்களும் இதுகுறித்துப் பேசுகின்ற நேரத்தில் பாராட்டி, நன்றி தெரிவித்துப் பேசினார்கள். அதே நேரத்தில், ஒருசில கோரிக்கைகளையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, ஏற்கெனவே, கழக ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், உயிர் நீத்து தியாகிகளாக மாறிய அந்த 21 தியாகிகளின், ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ.3 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.*

அதேபோல, அவர்களது குடும்பத்திற்கு பென்ஷன் தொகை மாதம் 3,000 ரூபாய் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக அதுகுறித்து ஆய்வு செய்து, அரசு சார்ந்த நிறுவனங்களில் கல்வித் தகுதியின் அடிப்படையில் நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற அந்த உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கவன ஈர்ப்பு

தமிழகத்தில் சில சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

2021 செப்டம்பர் 2]

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்டம்பர் 1 ஆம் தேதி முதல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நிகழ்ச்சி நிரலில் உள்ளதை மட்டும் முதலில் படித்துவிட்டு அமர்ந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்வார்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *தமிழ்நாட்டிலுள்ள சுங்கச் சாவடிகளில். . . (குறுக்கீடு)*

4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. புகழேந்தி அவர்கள்.*

திரு. நா. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநீதி போராட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த அந்த 21 தியாகிகளின் குடும்பங்களுக்கு ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் தலைவர் தளபதி அவர்கள் சொன்னதுபோல், 3 இலட்சம் ரூபாயும், பென்ஷனாக மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். தலைவர் அவர்களைத் தொடர்ந்து தளபதி அவர்கள் அந்த சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் கட்ட ஆணையிட்டதற்கு மாவட்ட மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே கலைஞர் ஆட்சி காலத்தில் அவர்களுடைய மகன்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மீண்டும் அவர்கள் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று தலைவர் தளபதி அறிவித்தது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிறது. மாவட்ட மக்களின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூறுகிறேன். நன்றி, வணக்கம்.*

5. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

தமிழகத்தில் சில சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) கவனத்தை ஈர்க்கிறேன் என்று ஒரு வரியை மட்டும் படித்து அமருங்கள்.*

[2021 செப்டம்பர் 2

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 21 சுங்கச் சாவடிகளுடைய கட்டணம் உயர்ந்துள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியின் பாதுகாவலர் முதல்வருக்கு என் முதல் வணக்கம். விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் 'கவன ஈர்ப்பு' என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விவர அறிக்கை

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் செயல்படும் சுங்கச்சாவடிகளில், ஆண்டுதோறும் ஒப்பந்த அடிப்படையில், கட்டணம் திருத்தம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. இந்நேர்வில் மொத்தம் உள்ள 48 சுங்கச்சாவடிகளில், 21 சுங்கச்சாவடிகளுக்குத் திருத்திய கட்டணம் செப்டம்பர் முதல் செயல்பாட்டிற்கு வருகிறது. இதில் மேற்கூறிய 14 சுங்கச்சாவடிகளும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலை நிறுவனம் NHAI–ன் சார்பாக 48 சுங்கச்சாவடிகள் இயங்கிவருகின்றன. அதில் 24 சுங்கச்சாவடிகளின் கட்டணம் கடந்த ஏப்ரல் 1 ஆம் தேதி உயர்த்தப்பட்டது. நேற்றைய தினம் மேலும் 21 சுங்கச்சாவடிகளின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. NHAI–யினுடைய இந்தக் கட்டண உயர்வு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஏற்கெனவே அவர்கள் செலவழித்ததற்கான தொகையை வசூலிப்பதற்காக 15 ஆண்டுகள் கட்டணத்தை வசூலிக்கலாம். அதற்குப் பிறகு வெறும் 40 விழுக்காடு பராமரிப்புக்காக மட்டும்தான் வசூல் செய்ய வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இந்த 48 சுங்கச் சாவடிகளில் பெரும்பான்மையான

2021 செப்டம்பர் 2] [*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*]

சுங்கச் சாவடிகள் 15 ஆண்டுகள் கழிந்த பிறகும்கூட, இந்தச் சுங்கக் கட்டணத்தை வசூலிக்கின்றார்கள். The New Indian Express *பத்திரிகை,* Right to Information Act*–தகவல் பெறும் உரிமை சட்டத்தில் தாம்பரத்திலிருந்து திண்டிவனம் வரையுள்ள நான்கு வழிச் சாலை தொடர்பாக ஒரு கேள்வியைக் கேட்டது. அந்தக் கேள்விக்கு* NHAI *பதிலளித்திருக்கின்றது. என்ன பதிலென்றால், சென்னை, தாம்பரத்திலிருந்து திண்டிவனம் வரையுள்ள அந்த நான்கு வழிச் சாலையில் பரனூரிலும், ஆத்தூரிலும் இரண்டு சுங்கச் சாவடிகள் இருக்கின்றன. இந்த இரண்டு சுங்கச் சாவடிகளும் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் இயங்கிவருகின்றன. அதற்கு மூலதனமாகச் செலவு செய்த தொகை 536 கோடி ரூபாய். அதன் பிறகு (குறுக்கீடு) 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி வரைக்கும் சுங்க வசூல் செய்தது கிட்டத்தட்ட 1,098 கோடி ரூபாய். அதற்கு மேலும் நீங்கள் ஏன் வசூல் செய்கின்றீர்கள் என்று கேட்டால், பணவீக்கத்தின் காரணமாக முதலீட்டுச் செலவு அதிகரித்துவிட்டது. அதைத்தவிர, பராமரிப்பிற்காக, அதை இயக்குவதற்காக 63 விழுக்காடு செலவாகின்றது. எனவே, தொடர்ந்து கட்டணம் வசூல் செய்வோம் என்று சொல்கிறார்கள். இதை ஓர் எடுத்துக்காட்டுக்காகத்தான் சொல்கின்றேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்,* NHAI *சுங்கச்சாவடிகள் மூலமாக தமிழ்நாடு மக்கள்மீது ஒரு பொருளாதாரத் தாக்குதலை நடத்தி வருகிறது.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இன்னொரு கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் அடுத்த கேள்வி கேளுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சுங்கச்சாவடி பற்றிப் பேசினாலே, திரு. வேல்முருகன் அவர்களுடைய பெயர் என்னுடைய ஞாபகத்திற்கு வந்துவிடும். (குறுக்கீடு) (சிரிப்பு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படும்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் ஒன்றிய அரசின் நிதியின்மூலம் பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் கட்டுமானம், பராமரிப்பு, அகலப்படுத்துதல், மேம்படுத்துதல்*

மற்றும் ஒப்படைப்பு என்கிற BOT திட்டத்தின்கீழ் சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சாலைகளில், மொத்தம் 48 சுங்கச்சாவடிகளில் ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலை கட்டணம் (விகிதங்கள் மற்றும் வசூல் நிர்ணயம்) விதிகள் 2008-ன்படி, சுங்கக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கட்டணம் ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்பட ஒப்பந்தத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில் 21 சுங்கச்சாவடிகள் செப்டம்பர் மாதத்திலும், மீதமுள்ள 27 சுங்கச்சாவடிகள் ஏப்ரல் மாதத்திலும் ஆண்டுதோறும் சுங்கக் கட்டணத்தை மாற்றி, ஒன்றிய அரசின் விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில், மேற்கூறிய 14 சுங்கச்சாவடிகளும் அடங்கும். ஆக, ஏற்கெனவே 2008-ல் போடப்பட்ட விதிகளின் அடிப்படையில்தான், ஒன்றிய அரசு NHAI மூலமாக ஆண்டுக்காண்டு சுங்கக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், ஒரு கேள்வியை ஒரு நிமிடத்திற்குள் கேளுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வாதாரம் தொடர்பான கேள்வி இது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு பேருந்துக் கட்டணத்திலிருந்து விலக்களித்து, இலவசமாக பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய சலுகை அளித்திருக்கிறார்கள். அந்த அரசுப் பேருந்து தஞ்சாவூரிலிருந்து சென்னை வர வேண்டுமென்றால், ஏறத்தாழ 8,000 ரூபாய் சுங்க வரி செலுத்த வேண்டியிருக்கிறது. ஒருவேளை அந்தப் பேருந்து breakdown ஆகிவிட்டால், அது இன்னும் இரட்டிப்பாகக்கூடிய சூழல் இருக்கிறது. பெட்ரோல் விலையில் 3 ரூபாயை இந்த அரசு இந்தக் கூட்டத் தொடரில் குறைத்திருக்கிறது. மக்கள் அனைவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட சூழலில், மக்களுடைய பொருளாதாரத்தை ஏற்றம் செய்வதற்காக இவ்வாறான ஒரு பங்களிப்பைச் செய்யும்போது, (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே 15 ஆண்டுகள் கழிந்த பிறகும்கூட, முழுமையான கட்டணத்தை, கந்துவட்டிக்காரனைவிட மோசமாக, நாங்கள் ஏற்கெனவே செய்த முதலீட்டிற்கு பணவீக்கத்தின் காரணமாக முதலீடு உயர்ந்துவிட்டது என்று சொல்லி, நான் ஏற்கெனவே

2021 செப்டம்பர் 2] [*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*]

குறிப்பிட்டதுபோல, NHAI *அமைப்பு ஒரு பெரும் பொருளாதாரத் தாக்குதலை தமிழக மக்கள்மீது நடத்துகின்றது. எனவே, அனைத்து சுங்கச்சாவடிகளையும் தமிழ்நாட்டில் கட்டணம் இல்லாமல் நடத்தக்கூடிய நிகழ்வுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை சுங்கக் கட்டண விதி. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், நீங்கள் மத்திய அரசிடம் சொல்லி அதைக் குறைக்கச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை கட்டணம் (விகிதங்கள் மற்றும் வசூல் நிர்ணயம்) விதிகள் 2008–ல், மாநகர, நகர எல்லையிலிருந்து 10 கி.மீ. தொலைவிற்கு சுங்கச்சாவடிகள் அமைக்க சில வரன்முறைகள் உள்ளன. பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சென்னசமுத்திரம், நெமிலி, சென்னை புறவழிச்சாலையிலுள்ள வானகரம், சூரப்பட்டு, சென்னை-திருச்சி சாலையிலுள்ள பரனூர் ஆகிய 5 சுங்கச்சாவடிகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, நீண்ட காலமாக ஏன் சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது, ஆய்வு செய்யுங்கள் என்று எங்கள் துறைக்கு ஆணையிட்டு, நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையில், மேற்படி விதி 2008–ல், நகரத்தை ஒட்டியிருக்கின்ற பகுதிகளில், 10 கி.மீ.–க்கு உட்பட்டிருந்தால், அங்கு சுங்கம் வசூலிக்கக் கூடாது என்று ஒரு* sub–clause *இருந்தது. அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறியவுடனேயே, மேற்கூறிய 5 சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூல் செய்வதை நிறுத்துவதற்கு ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதச் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களுக்கு நேரடியாகக் கடிதம் எழுதினோம். கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர்*

முடிந்தவுடனேயே, அதன் நகலை எடுத்துக்கொண்டு, என்னை டெல்லிக்கு நேரடியாகச் சென்று, இந்த 5 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதை கட்டாயம் இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், நீங்கள் போட்ட விதி அப்படித்தான் சொல்கிறது. மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், 10 கி.மீ.-க்கு உட்பட்டு இருந்தால் அந்தச் சுங்கச்சாவடியை எடுத்துவிட வேண்டும் என்று 2008 ஆம் ஆண்டு நீங்கள் போட்ட விதியிலே இருக்கிறது என்பதை நீங்கள் சுட்டிக்காட்டி, அதை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடனேயே, அதன் நகலை எடுத்துக்கொண்டு, நேரடியாக டெல்லிக்குச் சென்று ஒன்றிய அரசிலே இருக்கிற மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களை வலியுறுத்தி, இந்த 5 சுங்கச்சாவடிகளை எடுத்துவிடுவதற்கு முதலில் முயற்சி எடுப்போம். ஏற்கெனவே கேரளாவிலே அதிகமான சுங்கச்சாவடிகள் இருந்தன. இப்போது அங்கு 3 சுங்கச்சாவடிகள்தான் இருக்கின்றன. அங்கிருக்கிற அந்த கிலோ மீட்டரையும் தமிழ்நாட்டில் இருக்கிற இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கிலோ மீட்டரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இங்கு 16 சுங்கச்சாவடிகள்தான் சட்டப்படி இருக்க வேண்டும். ஆனால், இங்கே 48 சுங்கச்சாவடிகள் இருக்கின்றன. இதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே, இரண்டாவது கட்டமாக அதையும் வலியுறுத்தி, இரத்துச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யும் என்பதை இந்த நேரத்திலே பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதுதான் உங்கள் பெயரையும் சொல்லிவிட்டோமே. அதாவது,* tollgate *என்றால், திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. வேல்முருகன் அவர்களும்தான். இரண்டுபேர் பெயரும் பதிவாகிவிட்டது.*